# கலைமகளே அறிவின் செல்வி!

## கடற்கரை கவியரங்கு – 595

## 01-11-2020



அறிவுக் கண்ணையும் அவள் திறப்பாள்!
ஆற்றல்தனையும் தான் வளர்ப்பாள்!
இகத்தில் அறிவின் செல்வி அவளே எனவாய்,
ஈடில்லா சான்றோர் தாமும் நமக்கு;

உருபெறும் அறிவில் நிலைக்கும் வகையாய்,
ஊருக்குள் நாளும் சொல்லியே வளர்த்தார்!
எளிமையே என்றும், அறிவின் கொற்றம்!
ஏற்றமே நமது செயலின் நிலைக்கலன்!

ஐயமே நல்லதோர் அறிவின் மாட்சி!,
ஒற்றுமை என்பது அன்பின் செயல்நிலை!
ஓங்கும் யாவுமே வாழ்வை நிறைக்கும்!
ஔவையின் தமிழாய் நாளும் நிறைந்தே!

அஃதே உளவியல் அறிவீர் தாமே! .

**கவிவளவன்** (25-10-2020)

